சிறப்பு சார்பு நீதிமன்றம், (இயக்கவூர்தி விபத்துக் கோருரிமை வழக்குகள் தீர்ப்பாயம்),
மதுரை.
முன்னிலை: திரு.A. சரவண செந்தில் குமார், பி.காம்., பி.எல்.,
சிறப்பு சார்பு நீதிபதி, மதுரை
2026 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 22 ஆம் நாள் திங்கட்கிழமை
எம்.சி.ஓ.பி.எண். 1485 / 2025
CNR No. TNMD0E0008432025

வினோத்குமார்,(வயது 35/2025),
த/பெ சுந்தரம்
எண்,27/2, ரோஜா தெரு,
பெத்தானியபுரம்,
அரசரடி,
மதுரை 625 016.

... மனுதாரர்

/எதிராக/

நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,
காரைக்குடி.

... எதிர்மனுதாரர்

இம்மனு என் முன்பாக 19.06.2026 அன்று இறுதி விசாரணைக்கு வரப்பெற்று மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.S.மணிகண்டன்., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.M.ராஜேந்திரன்., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலித்தும், இன்று வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து, இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

**1.** கடந்த 18.04.2025ம் தேதியன்று, மனுதாரருக்கு, TN 74 N 1348 என்ற வாகனத்தில் ஏற்பட்ட விபத்திற்காக ரூ.2,50,000/- இழப்பீடு கோரி, மோட்டார்

SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by SARAVANA SENTHIL KUMAR
Date: 2026.06.22 17:56:17 +0530

வாகன சட்ட பிரிவு 164—ன் கீழ் மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் :</u>**

2.1) மனுதாரர் காயம்பட்ட நபர். விபத்தின்போது மனுதாரருக்கு வயது 35, மனுதாரர் விபத்து சமயத்தில் ஆட்டோ ஓட்டுநராக வேலை செய்து மாதம் ரூ.25,000/— சம்பாதித்து வந்தார்.

**2.2)** கடந்த 18.04.2025ம் தேதியன்று இரவு சுமார் 9.45 மணியளவில் மனுதாரருக்கு சொந்தமான ஆட்டோ பதிவு எண்.TN 58 T 4177 என்ற வாகனத்தினை மதுரையிலிருந்து சோழவந்தான் செல்வதற்காக ரோட்டின் இடதுபுறம் மெதுவாக சென்றுகொண்டிருந்தபோது எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டட அரசு பேருந்து பதிவெண் TN 74 N 348 என்ற எண்ணுள்ள பேருந்தை அதன் ஓட்டுநர் எதிர்திசையிலிருந்து ஓட்டி வந்த மனுதாரர் ஓட்டி சென்ற வாகனத்தின் மீது மோதியதில், முகப்பகுதியில் கொடுங்காயங்களும், வலது விலா எலும்பு முறிவும், முக காயங்களும் ஏற்பட்டுள்ளது.

2.3) மேற்படி விபத்தில் ஏற்பட்ட காயங்களுக்காக மனுதாரர் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளார். மேற்படி விபத்தின் காரணமாக மனுதாரர் முன்பு போல் எந்த வேலையும் செய்யமுடியாமலும், மனதளவிலும் உடலளவிலும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், சிறிய அளவிலான எடையை தூக்க முடியாமலும் சிரமம் ஏற்படுகிறது. விபத்து சம்பவம் குறித்து மதுரை மாநகர், போக்குவரத்து புலனாய்வு பிரிவு எண்.3 காவல் நிலையத்தில் குற்ற எண்.63/2025 என்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மோட்டார் வாகன சட்டம் பிரிவு 164ன் கீழ் இழப்பீடு கோரி மனுதாரர் தாக்கல்

SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by SARAVANA SENTHIL KUMAR
Date: 2026.06.22 17:56:29 +0530

செய்துள்ளார். அதனால் மேற்படி இழப்பீட்டை எதிர்மனுதாரர் வழங்க கடமைப்பட்டவர் ஆவார். மேற்படி விபத்தில் ஏற்பட்ட காயத்திற்காக ரூ.2,50,000/- இழப்பீடு கோரி, மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>**எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் :**</u>

3.1) மனு சட்டப்படியும், சங்கதிகள் படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனுவில் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் தவிர மற்றவைகள் இந்த எதிர்மனுதாரரால் மறுக்கப்படுகிறது. கடந்த 18.04.2025ம் தேதியன்று இந்த எதிர்மனுதாரின் பேருந்து எண் TN-58-N-1348-ஐ அதன் ஓட்டுநர் இரவு 08.55 மணியளவில் கொசவப்பட்டியில் டயம் எடுத்து பெரியார் நிலையம் நோக்கி கவனமாகவும் மிதமான வேகத்திலும், சாலையின் இடது ஓரமாக ஓட்டிச் சென்றார் என்றும், பேருந்து கோச்சடை முத்தையா கோவில் அருகில் மேற்கிலிருந்து கிழக்காக மெதுவாக சென்று கொண்டு இருக்கும் பொழுது பேருந்துக்கு எதிர்திசையில் இருந்து கிழக்கிலிருந்து மேற்காக வந்த TN-58-T-4177 என்ற எண் கொண்ட ஆட்டோ ஓட்டுநர் வினோத்குமார் என்பவர் தவறான திசையில் வந்து புறமாக ஏறி வருவதை கண்ணுற்ற பேருந்து ஓட்டுநர் பேருந்தை மேலும் இடது புறம் திருப்பி நிறுத்திவிட்டார் என்றும். மேற்படி நின்ற பேருந்தின் முன் வலது பக்க பம்பரில் வந்த வேகத்தில் ஆட்டோவை கட்டுப்படுத்த முடியாமல் தன்னிச்சையாக மோதி தனக்கு தானே விபத்தை ஏற்படுத்திக் கொண்டார். மேற்படி சம்பவத்திற்கு முழுக்க முழுக்க மேற்படி ஆட்டோ ஓட்டுநரின் கவனக்குறைவும் அஜாக்கிரதையுமே காரணமாகும். எனவே தான் மேற்படி விபத்து சம்பந்தமாக மேற்படி ஆட்டோ ஓட்டுநர் வினோத்குமாரின் தந்தை சுந்தரம் த/பெ. பட்டாணி செட்டியாா என்பவர் போக்குவரத்து புலனாய்வு பிரிவு III அளித்த புகாரில் தனது மகன் வினோத்குமார் த/பெ சுந்தரம் என்பவரின் கவனக்குறைவே காரணம்

SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by SARAVANA SENTHIL KUMAR
Date: 2026.06.22 17:56:35 +0530

என்று கூறியதன் அடிப்படையில் மேற்படி வினோத்குமார் மீது குற்ற எண். : 63/2025 BNS U/s 281,125(a) படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி சம்பவத்திற்கு பேருந்து ஓட்டுநர் எந்த வகையிலும் பொறுப்பாகமாட்டார். எனவே மனுதாரருக்கு இந்த எதிர்மனுதாரர் எந்திவித இழப்பீடும் தரவேண்டியதில்லை என்று ஆட்சேபனைச் செய்யப்படுகிறது.

3.2) மேற்படி ஆட்டோவின் உரிமையாளர் மற்றும் காப்பீடு நிறுவனத்தை இவ்வழக்கின் அவசிய தரப்பினர்கள் ஆவார்கள். மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயம் என்பதற்கு தகுந்த ஆவணங்களை சமர்ப்பிக்கவேண்டும். காயங்கள். மனுதாரருக்கு பகுதி ஊனமோ நிரந்தர ஊனமோ ஏற்படவில்லை. மனுதாரரின் வயது, தொழில், மாத வருமானம் ஈட்டும் அளவு ஆகியவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர். மனுதாரர் பல்வேறு தலைப்புகளின் கீழ் அதிகப்படியான இழப்பீடு கேட்டுள்ளார். எனவே மனுதாரின் மனுவை தள்ளுபடி செய்யப்படவேண்டுமென வாதிட்டார்.

**4. தற்போது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள்:**

1) மனுதாரருக்கு எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவரா ? மற்றும் மனுதாரருக்குக் கிடைக்கக்கூடிய இழப்பீடு தொகை எவ்வளவு?

2) மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரங்கள் என்ன?

5. மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டும் மனுதாரர் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by SARAVANA SENTHIL KUMAR
Date: 2026.06.22 17:56:39 +0530

6. எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் ஓட்டுநர் கருப்புசாமி என்பவர் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தவில்லை.

7. கற்றறிந்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின்போது ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை மற்றும் ம.சா.ஆ.2 டிஸ்சார்ஜ் சம்மரி ஆகிய மருத்துவ ஆவணங்களின் படி, விபத்து மற்றும் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்கள் தொடர்பாக தெளிவாக முன்னிலைப்படுத்தப்பட்டதாகவும், எனவே, மனுவில் கோரியபடி உரிய இழப்பீட்டுத் தொகையை வழங்க உத்தரவிடுமாறு வாதிட்டார்.

8. கற்றறிந்த எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின்போது, வழக்கு விபத்தானது மனுதாரர் ஓட்டி சென்ற ஆட்டோவின் அலட்சியத்தால் மற்றும் கவனக்குறைவால் ஏற்பட்டது எனவும், எதிர்மனுதாரரின் அரசு பேருந்து ஓட்டுநரின் அலட்சியத்தால் ஏற்படவில்லை எனவும், எனவே மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்து, உத்தரவிடுமாறு வாதிட்டார்.

**<u>9. பிரச்சனை 1 க்கான தீர்வு</u>**

9.1) மனுதாரர் தனது மனுவில் கடந்த 18.04.2025ம் தேதியன்று இரவு சுமார் 9.45 மணியளவில் மனுதாரருக்கு சொந்தமான ஆட்டோ பதிவு எண்.TN 58 T 4177 என்ற வாகனத்தினை மதுரையிலிருந்து சோழவந்தான் செல்வதற்காக ரோட்டின் இடதுபுறம் மெதுவாக சென்றுகொண்டிருந்தபோது எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டட அரசு பேருந்து பதிவெண் TN 74 N 348 என்ற எண்ணுள்ள பேருந்தை அதன் ஓட்டுநர் எதிர்திசையிலிருந்து ஓட்டி வந்த மனுதாரர் ஓட்டி சென்ற வாகனத்தின் மீது மோதியதில், முகப்பகுதியில் கொடுங்காயங்களும், வலது விலா எலும்பு முறிவும், முக காயங்களும் ஏற்பட்டதாகவும், மேற்படி

SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by SARAVANA SENTHIL KUMAR
Date: 2026.06.22 17:56:43 +0530

விபத்தினால் ஏற்பட்ட காயங்களுக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் பெற்று வந்ததாகவும், அந்த வகையில் மருத்துவ செலவாக ரூ.1,00,000/-ம் செலவு செய்ததாகவும், விபத்தின் போது மனுதாரருக்கு வயது 35 என்றும், மனுதாரர் ஓட்டுநராக வேலை செய்து வருடம் ரூ.25,000/- சம்பாதித்து வந்ததாகவும், விபத்து காயத்தினால் முன்பு போல் எந்த வேலையும் செய்யாமல் வருமான இழப்பிற்கு உள்ளாகி பாதிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே ரூ.2,50,000/-ம் வழங்க கோரி எதிர்மனுதாரருக்கு எதிராக மனுதாரர் மனுவை தாக்கல் செய்துள்ளார்.

9.2) மனுதாரர் மனு சங்கதிகளின் படியும், சாட்சியத்தின் படியும், ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையின் படியும், மதுரை டவுன் கோச்சடை முத்தையா கோவில் அருகில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்றுகொண்டிருந்தபோது, அதேரோட்டில் எதிர்திசையிலிருந்து வந்த TN 74 N 348 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாக தெரியவருகிறது. மேலும், எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட கருப்புசாமி மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது,

> *" மனுதாரர் ஓட்டி வந்த ஆட்டோவும் நான் ஓட்டி சென்ற அரசு பேருந்தும் மோதி விபத்து நடந்தது என்றால் சரிதான்.."*

என்று சாட்சியமளித்துள்ளார். எனவே மேற்படி விபத்து அரசு பேருந்தும், ஆட்டோவும் நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்பட்டதாக தெரியவருகிறது. மேற்படி விபத்திற்கு பேருந்து ஓட்டுநரின் கவனக்குறைவும் காரணம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. விபத்தில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்திற்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் கிசிச்சை பெற்றதை நிரூபிக்கும் விதமாக ம.சா.ஆ.2 மருத்துவ விடுவிப்பு அறிக்கை மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by SARAVANA SENTHIL KUMAR
Date: 2026.06.22 17:56:48 +0530

9.3) மனுதாரர் இந்த மனுவை பிரிவு 164 மோட்டார் வாகன சட்டத்தின் கீழ் இழப்பீடு கோரி தாக்கல் செய்துள்ளார். பிரிவு 164 மோட்டார் வாகன சட்டத்தின் படியான மனுவை பொறுத்து யாருடைய கவனக்குறைவு காரணமாக விபத்து நடந்தது என்பது குறித்து தீர்வு காணவேண்டிய அவசியம் இல்லை என்பது சட்டப்படியான தெளிவு ஆகும். மோட்டார் வாகன சட்டத்தின் படி வாகனத்தை பயன்படுத்திய மனுதாரரின் காயத்திற்காக No fault Liability அடிப்படையில் பிரிவு 163(A) மோட்டார் வாகன சட்டத்தின் படி மனு தாக்கல் செய்ய வழி வகை செய்யப்பட்டுள்ளது.

9.4) மோட்டார் வாகன திருத்த சட்டம் 2019ம் பிரிவு 164ன் கீழ் மேற்படி விபத்தில் ஏற்பட்ட காயத்திற்காக இழப்பீடு கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். பிரிவு 164 மோட்டார் வாகன திருத்தச் சட்டம் 2019 பின்வருமாறு கூறுகிறது.

***<u>Section 164 in The Motor Vehicles Act, 1988</u>***

*164. Payment of compensation in case of death or grevious hurt, etc. - (1) Notwithstanding anything contained in this Act or in any other law for the time being in force or instrument having the force of law, the owner of the motor vehicle or the authorised insurer shall be liable to pay in the case of death or grievous hurt due to any accident arising out of the use of motor vehicle, a compensation, of a sum of five lakh rupees in case of death or of two and a half lakh rupees in case of grievous hurt to the legal heirs or the victim, as the case may be.*

*(2)In any claim for compensation under sub-section (1), the claimant shall not be required to plead or establish that the death or grievous hurt in respect of which the claim has been made was due to any wrongful act or neglect or default of the owner of the vehicle or of the vehicle concerned or of any other person.*

*(3)Where, in respect of death or grievous hurt due to an accident arising out of the use of motor vehicle, compensation has been paid under any other law for the time being in force, such amount of compensation shall be*

SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by SARAVANA SENTHIL KUMAR
Date: 2026.06.22 17:56:52 +0530

| |
|---|
| *reduced from the amount of compensation payable under this section.* |

மேற்படி சட்டப்பிரிவின் படி, பிரிவு 164 மோட்டார் வாகன திருத்தம் சட்டம் 2019 கீழான இழப்பீடானது No fault liability ன் அடிப்படையில் வழங்கத்தக்க இழப்பீடாகும். எனவே, மேற்படி சட்டப்பிரிவின் கீழ் இழப்பீடு கோரும் மனுதாரர், விபத்து மோட்டார் வாகன பயன்பாட்டினால் ஏற்பட்டது என்பதை நிரூபணம் செய்தால் போதுமானது என்றும், யாருடைய கவனக்குறைவு மற்றும் தவறு காரணமாக விபத்து ஏற்பட்டது என்பதை நிரூபணம் செய்யவேண்டிய அவசியமில்லை என்றும், கூறப்பட்டுள்ளது தெரியவருகிறது.

9.5) இந்த வழக்கை பொறுத்தவரையில், மனுதாரர் ஆட்டோவை ஓட்டி சென்றபோது, எதிர்திசையில் இருந்து வந்த அரசு பேருந்து ஓட்டுநர் எதிரே வரும் வாகனங்களை கவனிக்காமல் வேகத்தை கட்டுப்படுத்தாமல் வந்து மோதி விபத்து ஏற்படுத்தியதாகவும், மேற்படி விபத்தினால் மனுதாரருக்கு கொடுங்காயங்கள் ஏற்பட்டதாகவும், எதிர்மனுதாரருக்கு சொந்தமான அரசு பேருந்தின் பயன்பாட்டின் மூலம் இந்த விபத்து நடந்துள்ளால் எதிர்மனுதாரர் தரப்பு பிரிவு 164 மோட்டார் வாகன சட்டம் 2019ன் படி மனுதாரர் இழப்பீடு கோரியுள்ளார்.

9.6) இந்த விபத்திற்கு யாருடைய தவறு மற்றும் கவனக்குறைவு காரணம் என்பது குறித்து நிரூபணம் செய்யவேண்டிய அவசியம் இல்லை என்று தெரியவரும் நிலையில், இந்த விபத்தில் எதிர்மனுதாரர் அரசு பேருந்து சாலையை பயன்படுத்தும் போது விபத்து ஏற்பட்டுள்ளது என்பது எதிர்மனுதாரர் தரப்பில் மறுக்கப்படவில்லை. எனவே, பிரிவு 164, மோட்டார் வாகன (திருத்த)

SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by SARAVANA SENTHIL KUMAR
Date: 2026.06.22 17:56:57 +0530

சட்டம் 2019ன் கீழ் மனுதாரருக்கு எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளார் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

9.7) காயத்தின் தன்மையை பரீசிலினை செய்கையில், ம.சா.ஆ.2 மருத்துவ விடுப்பு சான்றின் மூலம் மனுதாரருக்கு ( Linear Minimally displaced Fracutre of Lateral aspect of Rt 4 th, 5 th rib & anterolateral aspect of Lt 2,3,4,5) ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்பது தெளிவாக நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட சட்டப்பிரிவின் படி விபத்தினால் ஏற்பட்ட கொடுங்காயத்திற்கு ரூ.2,50,000/- மொத்த இழப்பீடாக வழுங்கத்தக்கதாக உள்ளது என்றும், மற்ற தலைப்பின் கீழ் இழப்பீடு வழுங்கதக்கதாக இல்லை என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. பிரிவு 164 மோட்டார் வாகன திருத்தம் சட்டம் 2019ன் படி மனுதாரருக்கு **ரூ.2,50,000/-** நஷ்ட இழப்பீடாக எதிர்மனுதாரர் வழுங்கவேண்டுமெனவும், என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

<u>**10. பிரச்சினை-2**</u>

10.1) இதர பரிகாரங்களைச் பொறுத்த வரை மனுதாரருக்கு இழப்பீடு வழுங்க அவசியம் இல்லை என்றே உத்தரவிடப்படுகிறது.

**11). இறுதியாக,** இம்மனுவின் மனுதாரருக்கு மனு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. எதிர்மனுதாரர் மனுதாரருக்கு மொத்த இழப்பீடாக **ரூ.2,50,000/-** (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்), மனுதாரர் இம்மனு தாக்கல் செய்த 01.08.2025 நாள் முதல் தொகையை சிறப்பு சார்பு நீதிமன்றத்தில் செலுத்தும் நாள் வரை 7.5% வட்டி மற்றும் செலவு தொகையுடன் கொடுக்க வேண்டும் என்றும்,

SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by SARAVANA SENTHIL KUMAR
Date: 2026.06.22 17:57:01 +0530

2. மாண்புமிகு உச்ச நீதிமன்றம் **Parminder Singh Vs Honey Goyal and others (Civil Appeal No.4299/2025) Dated 18.03.2025,** வழக்கின் உத்தரவை பின்பற்றி, மேற்படி தொகையை எதிர்மனுதாரர் ஒரு மாதத்திற்குள் மனுதாரர் வங்கி கணக்கில் (Indian Bank, Madurai Main Branch, A/c No.7398267381, IFSC Code : IDIB000M004) நேரடியாக வைப்பீடு செய்ய வேண்டும். மேற்படி இழப்பீட்டு தொகையை வைப்பீடு செய்யப்பட்ட விபரத்தை எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்திற்கு sscmcop1234@gmail.com or mdu.ascmcop-tn.indiancourts.nic.in என்ற E.mail-ID மூலம் தெரிவிக்கவேண்டும்.

3. மனுதாரர் நீதிமன்ற கட்டணமாக **ரூ.1,873/-** செலுத்தவேண்டும். மனுதாரர் ஏற்கனவே ரூ.100/- செலுத்தியதுபோக, மீதமுள்ள கூடுதல் நீதிமன்ற கட்டணம் **ரூ.1,773/-**ஐ 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டும். அவ்வாறு நீதிமன்ற கட்டணம் செலுத்தப்பட்ட விபரம் குறித்து மனுதாரர் எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு கொடுக்கவேண்டும். மனுதாரர் அவ்வாறு 15 தினங்களுக்குள் மீதமுள்ள நீதிமன்ற கட்டணம் செலுத்த தவறும்பட்சத்தில், அதற்கு பின்னிட்டு மனுதாரர் நீதிமன்ற கட்டணம் செலுத்தும் நாள் வரையிலான காலத்திற்கு இழப்பீடு தொகைக்கு எந்தவொரு வட்டியும் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதாக இல்லை எனவும், உத்தரவிடப்படுகிறது.

4. பின்னர் மனுதாரர் நீதிமன்ற கட்டணம் செலுத்தப்பட்ட விபரம் குறித்து நீதிமன்றத்தில் ஒப்புகை கடிதம் பெற்று எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு கொடுத்த பின்னர் மனுதாரர் வங்கி கணக்கில் இழப்பீடு தொகையை நேரிடையாக செலுத்த உத்தரவிடப்படுகிறது.

5. வழக்கறிஞர் கட்டணமாக **ரூ.8,000/-**ம், நிர்ணயம் செய்யப்படுகிறது.

SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by SARAVANA SENTHIL KUMAR
Date: 2026.06.22 17:57:05 +0530

**மனுதாரர் தரப்பு செலவுத் தொகை பட்டியல்**

| | | |
|---|---|---|
| நீதிமன்ற கட்டணம் | ரூ. | 1873/- |
| வக்காலத்து நாமா ஸ்டாம்பு | ரூ. | 10/- |
| வழக்கறிஞர் கட்டணம் | ரூ. | 8000/- |
| தட்டச்சு கட்டணம் | ரூ. | 100/- |
| **மொத்தம்** | ரூ. | **9,983/-** |

6. எதிர்மனுதாரர் மனுதாரருக்கு **ரூ.9,983/–** செலவுத்தொகையை செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

7. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற முன் தீர்ப்பு வழக்கு எண். Tr.Cmp. Nos. 264 to 281 of 2020 M/s. Cholamandalam Ms General Insurance Company Ltd., V/s. Mr. Ayyanar and othersல் 11.5.2020 அன்று பிறப்பித்த உத்தரவுபடி நிறைவேற்றாணையின் விவரங்கள் அனைத்தும் இந்த உத்தரவில் சேர்க்கப்பட்டுவிட்டது. எனவே தனியாக நிறைவேற்றாணை பிறப்பிக்கப்படாது.

என்னால் உத்தரவு சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம், 22–ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by SARAVANA SENTHIL KUMAR
Date: 2026.06.22 17:57:10 +0530

சிறப்பு சார்பு நீதிபதி,
சிறப்பு சார்பு நீதிமன்றம்,
மதுரை.

**மனுதாரர் தரப்பு சாட்சி**

ம.சா.1 – வினோத்குமார்

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | முதல் தகவல் அறிக்கை | நகல் |
| ம.சா.ஆ.2 | டிஸ்சார்ஜ் சம்மரி | அசல் |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.3 | ஆதார் அட்டை | நகல் |
| ம.சா.ஆ.4 | வங்கி கணக்கு புத்தகம் | நகல் |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>**

எ.ம.சா.1 – கருப்புசாமி

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் –</u>** இல்லை

SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by SARAVANA SENTHIL KUMAR
Date: 2026.06.22 17:57:16 +0530

சிறப்பு சார்பு நீதிபதி,
சிறப்பு சார்பு நீதிமன்றம்,
மதுரை.

சிறப்பு சார்பு நீதிமன்றம்,
(இயக்கவூர்தி விபத்துக் கோருரிமை
வழக்குகள் தீர்ப்பாயம்),
மதுரை.
எம்.சி.ஓ.பி எண்.1485/2025
வரைவு / செவ்வை உத்தரவு
நாள்22.06.2025